தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-10-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அக்டோபர் 2013 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

அக்டோபர் 2013 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து பயிர்ப்பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

### நெல்

திருநெல்வேலி, சேலம், கன்னியாகுமரி, தேனி, திருவாரூர், விழுப்புரம், தருமபுரி, மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நெல்லில் பரவலாக இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் வேப்பங்கொட்டை சாறு 5% தயாரித்து தெளிக்கவும். அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறிய விளக்குப் பொறிகள் ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் அமைக்கவும். அதிக சேதம் இருக்கும் பட்சத்தில் பாஸ்போமிடான் 40 எஸ் எல் 225 மி.லி அல்லது புரோபனோபாஸ் 50 ஈ.சி ஏக்கருக்கு 400 மி.லி. தெளிக்கவும்.

நெல் குலை நோய் தாக்குதல் பரவலாக கடலோரப் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தென்படுகிறது. நோய்த்தாக்குதல் கண்டவுடன் ஹேக்சகோனஸால் (0.25%) என்ற மருந்தை வாரம் இருமுறை தெளிக்கவும். மேலும் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (0.2%) பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தெளித்து மகசூலை பெருக்கவும்.

### உளுந்து

உளுந்துப் பயிரில் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மஞ்சல் தேமல் நோய் மற்றும் வேரழுகல் நோய் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் இந்நோயை பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த டைமெத்தியேட் 30 ஈ.சி. அல்லது மீதைல்டெமெட்டான் 25 ஈ.சி. மருந்தை 2 மி.லி. என்றளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

வேரழுகல் நோய் பாதித்த வயல்களில் கார்பன்டாசிம் 0.1% மருந்தை செடியைச் சுற்றி மண் நனையுமாறு ஊற்றவும்.

### பருத்தி

சேலம், தருமபுரி மற்றும் மதுரை மாவட்டங்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

*திருவண்ணாமலை மாவட்டத்தில் இளம் சிவப்பு காய்ப்புழு தாக்குதல் தென்படுகிறது. இனக்கவர்ச்சி பொறி வைத்து நடமாட்டத்தை கண்காணிக்கவும். தேவைப்பட்டால் ட்ரை அசோபாஸ் 40 ஈ.சி. ஒரு ஏக்கருக்கு 800 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.*

*கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புகையிலை சுருகு வைரஸ் நோய் மற்றும் சோர்சின் நோய் தாக்குதல் தென்படுகிறது. வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த தைமிதாக்சம் (0.05%) தெளிக்கவும். சோர்சின் நோயைக் கட்டுப்படுத்த டைபெனாகோனநோல் (0.05%) வாரமிருமுறை செடியைச் சுற்றி வேர்கள் நனையும்படி ஊற்றவும்.*

***தக்காளி***

*கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தக்காளி இலைக்கருகல் நோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மேன்கோசெப் என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமொருமுறை தெளிக்கவும்.*

***மஞ்சள்***

*ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மஞ்சள்இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மான்கோசாப் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது புரப்பியோகோனசோல் (0.2%) என்ற மருந்தை வாரமிருமுறை தெளிக்கவும்.*

***கரும்பு***

*சேலம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பொதுவாக தண்டுத்துளைப்பான் தாக்குதல் பொருளாதார சேதநிலைக்கு குறைவாகவே தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணி ட்ரைக்கோகிரமா (1 சிசி) ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தவும். இதனை 6 முறை 15 நாட்கள் இடைவெளியில் பயன்படுத்தவும்.*

***நிலக்கடலை***

*சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். மழை குறைவாக உள்ள பகுதிகளில் அதிக தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5% தயாரித்து தெளிக்கவும். மேலும் வேரழுகல் நோய்த்தாக்குதல் உள்ள பகுதிகளில் கார்பன்டாசிம் (0.1%) மருந்தை வேர்கள் நனையுமாறு ஊற்றவும்.*

***மக்காச்சோளம்***

*கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தண்டு துளைப்பான் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5% மற்றும் ஒட்டுந்திரவம் 1 மி.லி ஒரு லிட்டர் கலவைக்கு என்ற அளவில் சேர்ந்து பயன்படுத்தவும்.*

***கார்னேசன் மலர்கள்***

*நீலகிரி, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு மலைப்பகுதிகளில் இலைப்புள்ளி நோய்த்தாக்குதல் தென்படுகிறது. (இவற்றைக் கட்டுப்படுத்த கெக்சாகோனசோல் அல்லது*

புரப்பிகோனசோல் அல்லது மேன்கோசெப் என்ற மருந்தினை 0.02% வாரமொருமுறை தெளிக்கவும்).

**லில்லியம் மலர்கள்**

நீலகிரி மாவட்டத்தில் இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த 0.02% வாரமாருமுறை தெளிக்கவும். கெக்சாகோனசோல் அல்லது புரப்பிகோனசோல் அல்லது மேன்கோசெப் என்ற மருந்தினை 0.2% வாரமொருமுறை தெளிக்கவும்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள்

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்